# 6-ம் வகுப்பு ‘*சமூக அறிவியல்*’ (சமச்சீர்க் கல்வி)

1. தொலைநோக்கி இல்லாமல் வெறும் கண்களால் நாம் எத்தனை கோள்களைப் பார்க்க முடியும்?
   A) 3 B) 4 C) 5 D) 6

2. கீழ்கண்டவற்றுள் எது திடக்கோள் அல்ல?
   A) புதன் B) வெள்ளி C) பூமி D) சனி

3. பூமி, சூரியனுக்கு இடையே உள்ள தொலைவு சுமார்?
   A) 10 கோடி கிமீ B) 15 கோடி கிமீ
   C) 20கோடி கிமீ D) 22 கோடி கிமீ

4. தவறான இணையை காண்க
   A) சூரியன் - தானே ஒளிரும் பொருள்
   B) புளுட்டோ - குள்ளக் கோள்
   C) யுரேனஸ் - வாயு வளையம்
   D) ஏரிஸ் - குறுங்கோள்

5. கீழ்கண்ட கூற்றுகளை கவனி
   i) பூமி தன்னைத்தானே சுற்றும் கால அளவு 23 மணி 56 நிமிடம்
   ii) யுரேனஸ் சூரியனை சுற்றிவர 84 ஆண்டுகள் ஆகும்
   iii) வீனஸ் கிழக்கிலிருந்து மேற்காக சுற்றுகிறது
   iv) செரஸ் என்பது ஒரு குள்ளக்கோள்
   *இவற்றுள்:*
   A) i, iii, iv சரி B) அனைத்தும் சரி
   C) ii, iii, iv சரி D) ii, iii சரி

6. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:

| *கோள்* | | *துணைக் கோள்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| a) புதன் | - | 1) 0 |
| b) பூமி | - | 2) 1 |
| c) யுரேனஸ் | - | 3) 27 |
| d) வியாழன் | - | 4) 63 |

*குறியீடுகள்:*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

7. ‘*லூனா-3*’ என்ற செயற்கைகோள் சந்திரனின் மறுபக்கத்தை படம்பிடித்துக் காட்டிய ஆண்டு?
   A) 1959 B) 1960 C) 1961 D) 1962

8. I. சந்திரனில் வளிமண்டலம் இல்லை
   II. சந்திரனில் ஈரப்பசை உள்ளது
   *இவற்றுள்:*
   A) உண்மை, உண்மை B) உண்மை, பொய்
   C) பொய், உண்மை D) பொய், பொய்

09. பூமிக்கும் சூரியனுக்கும் இடையே சந்திரன் வந்தால்?
A) பௌர்ணமி B) அமாவாசை
C) ஏகாதசி D) தசமி

10. குறுங்கோள்களின் பாதை…………?
A) பூமிக்கும் செவ்வாய்க்கும் இடையில்
B) செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையில்
C) வியாழனுக்கும் சனிக்கும் இடையில்
D) மேற்கூறிய ஏதுமில்லை

11. பூமிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள தொலைவு எந்த மாதத்தில் அதிகமாக இருக்கும்?
A) ஜனவரி B) மார்ச் C) ஜுன் D) ஜுலை

12. சரியான இணையைக் காண்க
A) கி.பி. 2100 - லீப் ஆண்டு
B) டிசம்பர் 22 - தென் ஓட்டம் (தட்சிணாயானம்)
C) ஜுன் 21 - வட ஓட்டம் (உத்ராயனம்)
D) செப்டம்பர் 23 - சம இரவு-பகல்

13. பூமி தன்னைத் தானே சுற்றுவதால் ஏற்படும் மாற்றம்?
A) பருவகால மாற்றம் B) இரவு-பகல் மாற்றம்
C) வட ஓட்டம், தென் ஓட்டம் D) B மற்றும் C இரண்டும்

14. கிழக்கு மேற்காய் செல்லும் கற்பனைக் கோடு?
A) மகர ரேகை B) கடக ரேகை
C) பூமத்திய ரேகை D) மேற்கூறிய அனைத்தும்

15. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக:
a) நள்ளிரவு சூரியன் நாடு - 1) சம இரவு-பகல்
b) வானவியல் அறிஞர் - 2) கிறிஸ்துமஸ்
c) ஆஸ்திரேலியாவின் கோடைவிழா - 3) ஆர்யபட்டர்
d) மார்ச் 21 - 4) நார்வே

*குறியீடுகள்:*

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

16. தவறான இணையைக் காண்க
*மலைத்தொடர்* - *கண்டம்*
A) ஆல்ப்ஸ் - ஐரோப்பா
B) ஆண்டிஸ் - தென் அமெரிக்கா
C) ராக்கி - ஆஸ்திரேலியா
D) இமயமலை - ஆசியா

17. உலகின் மிகப்பெரிய பவளப்பாறை *“கிரேட் பாரியர் ரீப்”* காணப்படும் கடற்கரை?
A) ஆஸ்திரேலியா கடற்கரை B) தென்சீனக் கடற்கரை
C) கரீபியன் கடற்கரை D) மெரினா கடற்கரை

18. மூன்று பக்கங்களும் நிலமாகவும், ஒரு பக்கம் கடலாகவும் அமைந்த நீர்பரப்புக்கு ………… என்று பெயர்?
    A) நீர்ச்சந்தி B) நிலச்சந்தி
    C) விரிகுடா D) வளைகுடா

19. கடலில் உள்ள மீன்களுக்கு பெருமளவில் உணவாகப் பயணப்படும் உயிரி?
    A) பிளாங்டன் B) சீல்
    C) லார்வா D) பாசிகள்

20. பூமிக்கருவில் நிலவும் வெப்பநிலை?
    A) $3000^0$C B) $4000^0$C C) $5000^0$C D) $4500^0$C

21. 'ஜியாய்ட்' (Geoid) என்பது புவியின்?
    A) நிளம் B) வடிவம் C) சுழச்சி D) சாய்வு

22. முதன்முதலாக உலகின் வரைபடத்தில் அட்சக்கோடு, தீர்க்கக்கோடுகளை வரைந்தவர்?
    A) கெப்ளர் B) கோபர்நிகஸ் C) நியூட்டன் D) தாலமி

23. வானவியல் ஆராய்ச்சிக்கூடம் லண்டனில் எங்குள்ளது?
    A) பிராட்வே B) பீட்டர்ஸ் சதுக்கம்
    C) சவுத் வேல்ஸ் D) கிரீன்விச்

24. தவறான இணையைக் காண்க
    A) கரீன்விச் - $0^0$
    B) புவியின் மொத்த கோணம் - $360^0$
    C) மகர ரேகை - 23½$^0$ வடக்கு
    D) கருத்துசார் வரைபடம் - போக்குவரத்து, தொழில்கள்

25. செம்பு மற்றும் துத்தநாகம் கலந்த கலவைக்கு………… என்று பெயர்?
    A) சில்வர் B) வெண்கலம் C) பித்தளை D) எ∴கு

26. ஆதிமனிதன் முதலில் பழக்கிய விலங்கு?
    A) மாடு B) குதிரை C) நாய் D) ஒட்டகம்

27. '*ஹரப்பா*' என்பது எந்த மொழிச் சொல்?
    A) ஹிந்தி B) சிந்தி
    C) சமஸ்கிருதம் D) பிராகிருதம்

28. ஹரப்பா நாகரிகம் ஒரு………… நாகரிகம் ஆகும்?
    A) கிராம நாகரிகம் B) நகர நாகரிகம்
    C) திராவிட நாகரிகம் D) மேற்கூரிய அனைத்தும்

29. ஹரப்பா அகழ்வாராய்ச்சி நடைபெற்ற ஆண்டு?
    A) 1920 B) 1921 C) 1922 D) 1923

30. ஹரப்பா அமைந்துள்ள நதிக்கரை?
    A) சிந்து B) ஜுலம் C) சீனாப் D) ராவி

31. "*வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகம்*" - இவ்வரி இடம் பெற்றுள்ள நூல்?
    A) நன்னூல் B) பழமொழி
    C) நாலடியார் D) அகத்தியம்

32. மனித இனம் முதன்முதலில் தோன்றியதாகக் கருதப்படும் இடம்?
A) குமரிக் கண்டம் B) பரதக் கண்டம்
C) ஆப்பிரிக்க கண்டம் D) மேற்கூறிய ஏதுமில்லை

33. இடைச்சங்கம் நடைபெற்ற நகரம்?
A) தென்மதுரை B) கபாடபுரம்
C) கூடல்நகர் D) புகார்

34. தவறான இணையைக் காண்க
A) நிஷ்கா - தங்க அலகு
B) சபா - முதியோர் அவை
C) ஆரியவர்த்தம் - ஆரியர் முதலில் குடியேரிய பகுதி
D) பிரஜாபதி - புரோகிதர்

35. மைய அரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்த ஆண்டு?
A) 2003 B) 2004 C) 2005 D) 2006

36. சந்திரகுப்த மௌரியர், கூன்பாண்டியன், முதலாம் மகேந்திரவர்மன் ஆகியோர் பின்பற்றிய சமயம்?
A) சமணம் B) பௌத்தம்
C) சைவம் D) வைணவம்

37. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
A) யாப்பெருங்கலக்காரிகை B) நேமிநாதம்
C) நன்னூல் D) நாண்மணிக்கடிகை

38. புத்தரின் கருத்துக்களைப் பரப்ப துறவிகளால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு?
A) சங்கம் B) விகாரம்
C) மடாலயம் D) சைத்திரங்கள்

39. இந்தியாவில் புத்த விகாரங்கள் மிகுந்துள்ள மாநிலம்?
A) அருணாச்சலப் பிரதேசம் B) மேற்கு வங்கம்
C) பீகார் D) உத்திரப் பிரதேசம்

40. தவறான இணையைக் காண்க
A) அஜந்தா குகை ஓவியம் - மகாராஷ்டிரா
B) சாரநாத் - உத்திரப் பிரதேசம்
C) சாஞ்சி ஸ்தூபி - மத்திய பிரதேசம்
D) கோமதீஸ்வரர் சிற்பம் - ஆந்திரப் பிரதேசம்

41. கீழ்கண்ட கூற்றுக்களைக் கவனி
i) மணிமேகலையும் குண்டலகேசியும் பொளத்த நூல்கள்
ii) புத்திரின் மகன் ராகுலன்
iii) மகாயானம், புத்தரை தெய்வமாக வழிபட்ட பிரிவு
iv) கோமதீஸ்வரர் சிலை உள்ள இடம் மைசூர்
*இவற்றுள்:*
A) i, ii, iii சரி B) i, iii, iv சரி
C) ii, iii, iv சரி D) அனைத்தும் சரி

42. புத்தர் வாழ்ந்த காலத்தில் வடஇந்தியாவில் காணப்பட்ட மகாஜனபதங்களின் எண்ணிக்கை?
A) 14 B) 16 C) 17 D) 18

43. வைசாலி நகரம் கீழ்கண்ட எந்த மகாஜனபதத்தின் தலைநகராக விளங்கியது?
    A) மகதம் B) காந்தாரம்
    C) காசி D) வஜ்ஜி

44. பாடலிபுத்திரத்தில் மகப்பெரிய கோட்டையைக் கட்டியவர்?
    A) அஜாதசத்ரு B) பிம்பிசாரர்
    C) அசோகர் D) கனிஷ்கர்

45. கி.மு 326-ல் அலெக்ஸாண்டரின் படையெடுப்பின் போது எந்த மரபு மகதத்தை ஆண்டது?
    A) ஆர்யங்க மரபு B) சிசுநாக மரபு
    C) நந்த மரபு D) சுங்க மரபு

46. மகதத்தின் ஆட்சியை வடஇந்தியா முழுவதும் பரப்பியவர்?
    A) மகாபத்ம நந்தர் B) சிசுநாகர்
    C) பிம்பிசாரர் D) சந்திரகுப்த மௌரியர்

47. இந்தியாவில் முதன் முதலில் மக்கள் நல அரசை உருவாக்கியவர் எனக் கருதப்படுபவர்?
    A) கனிஷ்கர் B) அசோகர்
    C) இரண்டாம் சந்திரகுப்தர் D) மகேந்திரவர்மன்

48. பௌத்த மதம் ஓர் உலக மதமாக மாறக் காரணமானவர்?
    A) கனிஷ்கர் B) அஜாதசத்ரு
    C) அசோகர் D) சசாங்கன்

49. தனநந்தரை போரில் தோற்கடித்தவர்?
    A) சந்திரகுப்த மௌரியர் B) அசோகர்
    C) பிம்பிசாரர் D) அஜாதசத்ரு

50. ஆப்கானிஸ்தான் பகுதியில் அசோகரின் கல்வெட்டுக்கள் எந்த மொழியில் பொறிக்கப்பட்டுள்ளன?
    A) உருது B) பாலி C) பிராகிருதம் D) கிரேக்கம்

51. கனிஷ்கரின் தலைநகரம்?
    A) காஷ்மீர் B) லாகூர் C) உஜ்ஜயினி D) பெஷாவர்

52. மகாயான பௌத்த மதப்பிரிவு எத்தனையாவது புத்தமத மாநாட்டில் தோன்றியது?
    A) 4 B) 3 C) 2 D) 1

53. தவறான இணையைக் காண்க
    A) கனிஷ்கர் - இரண்டாம் அசோகர்
    B) புத்த சரிதம் - அசுவ கோசர்
    C) மகாவிபாசா - நாகர்ஜுனர்
    D) எஜிலாஸ் - கட்டடக்கலை வல்லுனர்

54. நாளந்தா பல்கலைக்கழகம் யாருடைய காலத்தில் உருவாக்கப்பட்டது?
    A) சந்திரகுப்தர்-I B) சமுத்திரகுப்தர்
    C) ஸ்ரீகுப்தர் D) குமாரகுப்தர்

55. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:
    A) வராகமிகிரர் B) சரகர்
    C) சுசுருதர் D) தன்வந்திரி

56. கீழ்கண்ட கூற்றுகளை கவனி
    i) ஹர்ஷரது தலைநகரம் கன்னோசி
    ii) காமரூபம் என்பது இன்றைய அஸ்ஸாம்
    iii) நாளந்தா ஒரு பௌத்த பல்கலைக்கழகம்
    iv) ஹர்ஷர் வடமொழியில் புலமை பெற்றவர்
    *இவற்றுள்:*
    A) அனைத்தும் சரி
    B) ii, iii சரி
    C) ii, iii, iv சரி
    D) i, ii, iii சரி

57. கிராமசபைக் கூட்டத்தை ஓர் ஆண்டிற்கு குறைந்தது எத்தனை முறை கூட்ட வேண்டும்?
    A) 3
    B) 4
    C) 5
    D) 6

58. 1930-ம் ஆண்டில் சென்னை அடையாற்றில் "*ஔவை இல்லம்*" தொடங்கியவர்?
    A) ராஜாஜி
    B) முத்துலட்சுமி ரெட்டி
    C) அன்னிபெசன்ட்
    D) தர்மாம்பாள்

59. ஔவை இல்லம் என்பது?
    A) அனாதைச் சிறுமியர் காப்பகம்
    B) வேலை இல்லாத இளம் பெண்கள் காப்பகம்
    C) கைவிடப்பட்ட விதவைப் பெண்கள் காப்பகம்
    D) மேற்கூறியவை அனைத்தும்

60. குடியரசில் குடிமக்கள் எல்லோரும் …………?
    A) சம முதலீட்டாளர்கள்
    B) சம சொத்துடையவர்கள்
    C) சம உரிமை உடையவர்கள்
    D) A மற்றும் C இரண்டும்

நன்றி!

**விடைகள்:**

தொகுப்பு: தே. சந்திரசேகர்

| வினா எண் | சரியான விடை | வினா எண் | சரியான விடை | வினா எண் | சரியான விடை | வினா எண் | சரியான விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 16 | C | 31 | A | 46 | A |
| 2 | D | 17 | A | 32 | A | 47 | B |
| 3 | B | 18 | C | 33 | B | 48 | C |
| 4 | D | 19 | A | 34 | D | 49 | A |
| 5 | B | 20 | C | 35 | B | 50 | D |
| 6 | A | 21 | B | 36 | A | 51 | D |
| 7 | A | 22 | D | 37 | D | 52 | A |
| 8 | A | 23 | D | 38 | A | 53 | C |
| 9 | B | 24 | C | 39 | C | 54 | D |
| 10 | B | 25 | C | 40 | D | 55 | A |
| 11 | D | 26 | C | 41 | A | 56 | A |
| 12 | D | 27 | B | 42 | B | 57 | B |
| 13 | B | 28 | B | 43 | D | 58 | B |
| 14 | D | 29 | B | 44 | A | 59 | C |
| 15 | B | 30 | D | 45 | C | 60 | C |